**கவனிக்க.-** *2016.10.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1990 - 2016 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2016.10.21

*1990 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1954 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) ஒதுக்கீடு (திருத்தம்) சட்டமூலம் 2016, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் 2016, யூலை மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி சட்டமூலம் 2016, ஓகத்து மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

எனது இலக்கம் : NWP/MORDRD/1/16/07/சாசனம் 2015

**வடமேல் மாகாண மாகாண சபை**

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க வடமேல் கிராம அபிவிருத்தி திணைக்களம் பற்றிய சாசனம்

இங்கு கீழ் பிரசுரிக்கப்படுகின்ற வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் பற்றிய சாசனம் இத் தினம் தொடக்கம் முப்பது நாட்கள் காலாவதியானதையடுத்து வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன். எவர் ஒருவருக்கு இச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவதொரு விடயம் காணப்பட்டால் அதனை அத் தினத்திற்கு முன் என்னிடத்தில் சமர்ப்பிக்கவும்.

குணதாச தெஹிகம,
வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி
மற்றும் வர்ததக, வீடமைப்பு,
தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி
மாகாண அமைச்சு (வடமேல் மாகாணம்).

வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி
மற்றும் வர்ததக, வீடமைப்பு,
தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி
மாகாண அமைச்சு – (வடமேல் மாகாணம்),
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2016, ஓகத்து 30.

**வடமேல் மாகாணத்தின், மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க கிராம அபிவிருத்தி சாசனம்**

நீண்ட பெயர்.

வடமேல் மாகாணத்தினுள் சுயமாக எழுந்து நிற்கின்ற மக்களை உருவாக்குவதற்காகவும், கிராமம் செழிப்பான வாழ்க்கை மத்திய நிலையமாக உருவாக்குவதற்கும், வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினை நிறுவுவதற்காகவும், கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி மகளிர் சங்கங்கள், பிரதேச அதிகார சபைகள், மாவட்ட அதிகார சபை மற்றும் மாகாண அதிகார சபைகளை நிறுவுதல், பதிவு செய்தல் மற்றும் பராமரிப்பதற்காகவும் மற்றும் அதற்கு முன்னுரையான விடயங்களை ஏற்பாடுகள் செய்வதற்கான சாசனமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 13 ஆம் அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தத்தின் 14 உ(1) சட்டம் மூலம் மாகாண சபையிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அங்கு 9 ஆம் உப அட்டவணையில் 1 ஆம் பட்டியலில் 10 ஆம் பிரிவின் ஒழுங்குகளுக்கமைய வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படும்.

சுருக்க பெயரும் நடைமுறைப் படுத்தப்படும் திகதியும்.

1. இந்த சாசனம் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் ........ இலக்க கிராம அபிவிருத்தி சாசனம் என்று அறிமுகப்படுத்தப்படும். வடமேல் மாகாண ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைத்த திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

சாசனத்தின் நோக்கம்.

2. இச் சாசனத்தின் நோக்கம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

(1) கிராமம் செழிப்பான வாழ்க்கை மத்திய நிலையமாக அமைப்பதற்காக வேலைத்திட்டங்களை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், செயற்படுத்தல், மேற்பார்வை செய்வதற்காக ஏற்பாடு செய்வதனால் வடமேல் மாகாண மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் கல்வி முன்னேற்றத்தினை ஏற்படுத்தல்.

(2) வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினை நிறுவுதல்.

(3) கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி மகளிர் சங்கங்கள், பிரதேச அதிகார சபைகள், மாவட்ட அதிகார சபை மற்றும் மாகாண அதிகார சபைகளை நிறுவுதல், பதிவு செய்தல்

செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல், கணக்காய்வு செய்தல், ஒருங்கிணைத்தல், துண்டித்தல் மற்றும் ஏலம் இடுவதற்காக ஏற்பாடு செய்தல்.

பகுதி - I

**மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் நிறுவுதல்**
**அதன் அமைப்பு அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்**

3. இச் சாசனத்தினது நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் என்று அறிமுகப்படுத்துகின்ற (இதன் பின்பு இது திணைக்களமாக குறிப்பிடப்படுகின்ற) திணைக்களம் ஒன்றினை நிறுவுதல் வேண்டும். திணைக்களத்தினை அமைத்தல்.

4. இத் திணைக்களம் சுழற்சியான பணிகள் இருப்பதற்கான மற்றும் பொது சின்னம் உள்ள சுய பெயரில் கிராம அபிவிருத்தி விடயத்திற்கு உரிய எல்லா நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கும் வழக்கு தொடர்வதற்கும், வேறு சட்ட ரீதியான செயற்பாடுகள் பற்றிய விடுதலைக்கு விளக்கம் கூறுவதற்கும் அதிகாரம் உள்ள கூட்டு நிறுவனமாகும். திணைக்களம் சட்ட ரீதியான நிறுவனமாக.

5. இத் திணைக்களம் மாகாண பணிப்பாளர் ஒருவரும், உதவிப் பணிப்பாளர் ஒருவரும், மாவட்ட உத்தியோகத்தர்கள் இருவரும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட உதவி பணிக் குழுவுடன் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். உத்தியோகத்தர்களை நியமித்தல்.

6. திணைக்களத்திற்கு அளிக்கப்படுகின்ற அதிகாரங்களை செயற்படுத்துவதற்காக வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளராக இலங்கை நிருவாக சேவையில் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் ஒருவர் விடயப் பொறுப்புடைய அமைச்சரினை விசாரித்து வடமேல் மாகாண ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்பட வேண்டும். பணிப்பாளரை நியமித்தல்.

7. (1) இச் சாசனத்தின் அல்லது இதற்கு இடைநிரப்பு காரணங்கள் அல்லது விதிக்கப்படுகின்ற கட்டளை ஏற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரம் பணிப்பாளரிடத்தில் அளிக்கப்படுகின்றது. மாகாண பணிப்பாளரின் அதிகாரம்.

(2) பணிப்பாளரினால் சந்தர்ப்பத்திற்கேற்ப தனித்துவ அதிகாரத்தினை திணைக்களத்தின் வேறு உத்தியோகத்தர்களுக்கும் வழங்க முடியும்.

8. இச் சாசனத்தின் பணிகளுக்காக நியமிக்கப்படுகின்ற எல்லா உத்தியோகத்தர்களும் குற்றவியல் சட்டக் கோவையின் கூற்றுகளுக்கு இணங்க அரச பணியாட்கள் என்ற வகையில் கவனத்தில் கொள்ள வேண்டும். அரச உத்தியோகத்தர் என்று.

9. வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறாகும். திணைக்களத்தின் பணிகள்.

(1) சுய சக்தியினால் எழுந்து நிற்பதற்காக பொது மக்களை ஒருங்கிணைத்தல்.
(2) மாகாணத்தினுள் கிராம அபிவிருத்தியிற்காக வேலைத்திட்டங்களை திட்டமிடல், செயற்படுத்தல், ஆராய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
(3) கிராம அபிவிருத்தி நடவடிக்கைக்காக மக்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனோநிலையினை மேம்படுத்துவதற்காக, கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சி செயற்திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்.
(4) கிராம அபிவிருத்தி மகளிர் சங்க பிரதேச அதிகாரச் சபை, மாவட்ட அதிகார சபை மற்றும் மாகாண அதிகார சபை, பதிவு செய்யும் நடவடிக்கையினை மேற்பார்வை செய்தல், கணக்காய்வு செய்தல், ஒருங்கிணைத்தல், துண்டித்தல் மற்றும் களைத்தல்.

10. கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரங்கள்.

(1) வடமேல் மாகாணத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி மகளிர் சங்க பிரதேச அதிகாரச் சபை, மாவட்ட அதிகார சபை மற்றும் மாகாண அதிகார சபைகளில் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், கணக்காய்வு செய்தல், விசாரணை செய்தலும் அதற்கு தேவையான ஆவணங்களை பரிசீலித்தல் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்ளல் கிராம அபிவிருத்தி பணிப்பாளருக்கு அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தருக்கு மேற்கொள்ள முடியும்.

## பகுதி II

### கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் நிறுவுதல், பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், கணக்காய்வு செய்தல், ஒருங்கிணைத்தல், துண்டித்து விடுதல், பதிவு செய்யப்பட்டதனை இரத்துச் செய்தல் மற்றும் சங்கங்களை களைத்து விடுதல் .

*கிராம அபிவிருத்தி சங்கத்தினை நிறுவுதல்.*

11. வடமேல் மாகாண மக்களின் சமூக பொருளாதார மற்றும் கலாசார அபிவிருத்தியிற்காக கிராமத்திற்கு அல்லது கிராம அலுவலர் பிரிவிற்கு ஒரு கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்று அல்லது கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் ஒன்று அல்லது அவ்வாறில்லாதுவிடின் உரிய சங்கங்கள் வகை இரண்டினையும் அமைத்துக் கொள்ள முடிந்ததுடன் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் ஒன்றிற்காக பெண்கள் மாத்திரம் உறுப்புரிமை வகித்தல் வேண்டும். அவ் எல்லா சங்கங்களும் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.

*சங்கத்தினை பதிவு செய்தல்.*

12. இச் சாசனம் நடைமுறைப்படுத்தல் ஆரம்பமாகும்போது வடமேல் மாகாணத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள கிராம அபிவிருத்தி மகளிர் சங்கங்களும் விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் விதிக்கப்படுகின்ற கட்டளையினால் விதிக்கப்பட்டுள்ளவாறு பதிவினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

*பதிவு செய்வதற்கான தகுதியின்மை.*

13. (1) இச் சாசனத்தில் 12 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற கட்டளைகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ள தரங்களுக்கு அமையாத கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்தினை பதிவு செய்வதற்காக தகைமை பெறுவதில்லை.

(2) இவ்வாறு பதிவு செய்வதற்கு தகைமையற்றது என்று உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

*சங்கத்தின் அதிகாரப் பிரிவு.*

14. சங்கத்தின் அதிகாரப் பிரிவு கிராம அலுவலர் பிரிவிற்கு பார்க்கிலும் விரிவாகலாகாததுடன், கிராமத்திலும் பார்க்க சிறிதாகவும் கூடாது. என்றாலும் ஒரு கிராமத்தினுள் பொருளாதார, சமூக மற்றும் புவியியல் என்ற அடையாளங்களை உள்ளடக்கிய கிராம கட்டிடம், வெளி அல்லது தோட்டப் பகுதிகளுக்காக ஒரு கிராமத்தினுள் சங்கங்கள் சிலவற்றையேனும் நிறுவ முடியும்.

*அதிகார பிரிவில் ஒரு சங்கம் அமைப்பது.*

15. என்றாலும் உரிய சங்கம் அதிகாரப் பிரிவினுள் நிறுவ இயன்றது ஒரு சங்கம் மாத்திரமாகும்.

*கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றினது செயற்பணி.*

16. கிராம அபிவிருத்தி சங்கங்களில் செயல்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(1) வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரிவினுள் வாழ்கின்ற மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலையினை மேம்படுத்துவதனால் நல்ல சமூகத்தினை உருவாக்குவதற்கு தேவையான அபிவிருத்தி செயற்திட்டம் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் மூலம் முறையாக நடைமுறைப்படுத்தல்.

(2) உறுப்பினர்களதும், அதிகாரப் பிரிவினுள் வாழ்கின்றவர்களதும், ஒழுக்கநெறி மற்றும் ஒத்துழைப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சமய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், இலக்கிய நடவடிக்கையினை மேம்படுத்தல், விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தல், சிரமதானம் நடாத்துதல் போன்ற நடவடிக்கைகள்.

(3) மனித வள அபிவிருத்தியிற்கு முன்னுரிமை வழங்கி கிராம மக்களின் அறிவு, கொள்கை மற்றும் திறமை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அறிவுறுத்தும் பயிற்சி செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

(4) கிராம உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பங்களித்தல்.

(5) சங்கத்தின் உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்வடையச் செய்வதற்காக ஆரோக்கியமான சுற்றுச் சூழலை கட்டியெழுப்புவதற்காக குடும்ப வருமான செலவு முகாமைத்துவத்தினை பழக்குதல்.

(6) சங்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவையான நிதியத்தினை உருவாக்குதல்.

(7) சங்கத்தின் நிதியத்தின் வருமானம் மற்றும் செலவிற்காக உரியவாறு முறைப்படி கணக்கு கொண்டு நடாத்துவதற்காக தேவையான புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பராமரித்தல்.

(8) சங்கத்தின் உறுப்பினர்களின் நலன்புரி நடவடிக்கைகளை கொண்டு நடாத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல்.

17. இச் சாசனத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்தினை பதிவு செய்வதற்காக தகைமையற்ற சந்தர்ப்பத்தில் பதிவு செய்வதினை நிராகரிக்கப்பட்டது பற்றி கிராம அபிவிருத்தி பணிப்பாளர் எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்டதனை நிராகரித்தல்.

18. இச் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு எதிராக செயற்படுகின்ற, கட்டளைகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு மற்றும் தரங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளாத மற்றும் செயலற்ற நிலைக்கு உட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி மகளிர் சங்கங்களை பதிவை இரத்தச் செய்ய முடியும். பதிவு செய்யப்பட்டதனை இரத்துச் செய்தல்.

19. அவ்வாறு பதிவினை இரத்து செய்யப்பட்ட சங்கத்திற்கு உரிய எல்லா சொத்துக்களும் கிராம அபிவிருத்தி அமைச்சிற்கு பொறுப்பளிக்கப்படும். விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் குறிப்பிடப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் அச் சொத்தை அமைச்சிற்காக பொறுப்பேற்று பாதுகாப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இரத்துச் செய்யப்பட்ட சங்கத்திற்குரிய சொத்து.

20. இச் சாசனத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற கட்டளையினால் குறிக்கப்பட்ட தரத்திற்கு அமையாத போது 13 ஆம் பிரிவுகளுக்கு அமைய பதிவினை நிராகரித்தல் மற்றும் இரத்துச் செய்வதற்கு உரித்தாக முறையீட்டினை பதிவினை நிராகரித்தது பற்றி அறிவிக்கப்பட்ட திகதி தொடக்கம் 90 நாட்களினுள் கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளரிடத்தில் சமர்பித்தல் வேண்டும். முறையீடு பற்றிய கடைசி தீர்மானம் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் தீர்மானமாகும். முறையீடு அதிகாரம்.

21. ஒரு அதிகாரப் பிரிவினுள் ஒரு வகையில் ஒரு சங்கத்திற்கு அதிகமான அளவில் காணப்படும் போது பணிப்பாளரின் தீர்மானப்படி அச் சங்கங்களை ஒன்றிணைக்க முடியும் /சங்கத்தின் நிதி ஒன்றிணைக்கப்பட்ட சங்க பொது கணக்கில் வைப்பிலிடல் வேண்டும். சங்கத்தினை ஒன்றிணைத்தல்.

22. சங்கங்களின் அதிகாரப் பிரிவு எல்லைகளுக்கு எதிராக கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்று, கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் ஒன்றினை நிறுவும்போது அச் சங்கத்தினை துண்டித்து கொண்டு நடாத்திச் செல்லுதல் உகந்தது என்று பணிப்பாளர் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சங்கத்தினை துண்டிக்க முடியும். அந்த சங்கங்களின் சொத்துக்கள் சங்கத்தின் பொதுச் சபையினை விசாரித்து பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆரம்ப கூட்டத்தினை சங்கம் துண்டித்து விடல்.

23. இச் சாசனத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் இப் பிரிவின் கீழ் விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் பிறப்பிக்கப்படுகின்ற கட்டளைகளினால் காட்டப்பட்டுள்ளவாறு பொது நியதிச் சட்டத்தின் கீழ் செயற்படுதல் வேண்டும். சங்கத்தின் நியதிச் சட்டம்.

24. (1) 12 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எல்லா கிராம அபிவிருத்தி சங்கமும், கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்திற்காகவும் நிதியம் ஒன்றினை நிறுவுதல் வேண்டும். சங்கத்தின் நிதியம்.

(2) நிதிய முகாமைத்துவத்திற்கு உரிய ஏற்பாடுகள் விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் 23 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற கட்டளைகள் மூலம் பிறப்பித்தல் வேண்டும்.

25. செயல்படாத கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம அபிவிருத்தி மகளிர் சங்க புனரமைப்பு செய்வதற்கு சங்கடமான சந்தர்ப்பங்களில் சங்கத்தினை களைத்துவிடல் வேண்டும். அச் சங்கத்திற்குரிய நிதி பணிப்பாளர் பொறுப்பில் காணப்படுகின்ற களைக்கப்படும் கணக்கிற்கு வைப்பிடல் வேண்டும். சங்கத்தினை கலைத்தல்.

## பகுதி - III

### கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை, மாவட்ட அதிகார சபை மற்றும் மாகாண அதிகார சபை நிறுவுதல், பதிவு செய்தல் மற்றும் கொண்டு நடாத்தல்

*கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையினை நிறுவுதல்.*

26. எல்லா பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகாரச் சபை ஒன்றினை நிறுவ வேண்டியதுடன், அந்த அதிகாரச் சபை பிரதேச செலாளர் பிரிவினுள் நிறுவப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கம், கிராம அபிவிருத்தி மகளிர் சங்கங்களின் தவிசாளர்களினால், செயலாளர்களினால் மற்றும் பொருளாளரினால் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் அமைப்பு.*

27. கிராம அபிவிருத்தி அதிகாரச் சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் பொருளாளர் கிராம அபிவிருத்திச் சங்கம் , கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்தின் தவிசாளர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் இடையில் நியமிக்கப்பட வேண்டியதுடன், பிரதேச அதிகாரச் சபையில் ஆலோசகராக அந்த பிரதேச அதிகாரச் சபை அமைந்துள்ள பிரிவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி அதிகாரபூர்வமாக அடைதல் வேண்டும். அப் பிரதேச அதிகார சபை அமைந்துள்ள பிரிவின் பிரதேச செயலாளர் பதவி அதிகார பூர்வமாக ஆலோசகராதல் வேண்டும்.

*கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் செயற்பணிகள்.*

28. பிரதேச அதிகார சபையின் செயற்பணிகள்:

(1) கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கங்களை மேம்படுத்துவதற்காக செயற்திட்டங்களை ஒழுங்கமைப்பதனால் சங்கங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வழிகாட்டல்.

(2) கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகாரச் சபை மற்றும் மாகாண அதிகாரச் சபையுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

(3) பணிப்பாளரினால் பெற்றுக் கொடுக்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைய பிரதேச செயலாளர் பிரிவில் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டம் ஒன்றினை ஒழுங்கமைப்பதற்காக ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல்.

(4) கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்திற்கிடையில் நல்ல தொடர்பினை கட்டியெழுப்புதல் மற்றும் அச்சங்கத்தின் நிதியினை மேம்படுத்துவதற்காக வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

(5) தமது அதிகாரப் பிரிவினுள் வாழ்கின்ற மக்களை அபிவிருத்தி செயற்பாட்டிற்காக அணிதிரட்டி முன்னோடிச் சேவையினை நிறைவேற்றல்.

*மாவட்ட கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் அமைப்பு.*

29. கிராம அபிவிருத்தி பிரதேச அதிகாரச் சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்களின் பிரதிநிதித்துவத்துடன் மாவட்ட அதிகாரச் சபை நிறுவப்படுதல் வேண்டும்.

*மாவட்ட கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையினை நிறுவுதல்.*

30. மாவட்ட அதிகாரச் சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் பொருளாளர் பிரதேச அதிகாரச் சபைகளில் உறுப்பினர்களிடையில் நியமிக்கப்பட வேண்டியதுடன் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அதிகாரபூர்வமாக ஆலாசகராதல் வேண்டும். கிராம அபிவிருத்தி மாகாண பணிப்பாளர் அதிகாரபூர்வமாக அதன் புரோகிதராவார்.

*மாவட்ட கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் செயற்பணிகள்.*

31. மாவட்ட அதிகார சபையின் செயற்பணிகள்,

(1) மாவட்டத்தினுள் கிராம அபிவிருத்திச் சங்க மேம்பாட்டிற்காக ஒத்தாசை வழங்குதல், ஆலோசனை பெற்றுக் கொடுத்தல் மற்றும் வழிகாட்டல்.

(2) பிரதேச அதிகார சபைகளில் கிராம அபிவிருத்தி திட்டமிடல் மூலம் மாவட்ட கிராம அபிவிருத்தி திட்டத்தினை ஒழுங்கமைப்பதற்காக பங்கேற்றல்.

(3) மாவட்டத்தில் காணப்படுகின்ற மற்றைய அமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் செயற்படுவதற்கு தேவையான ஒத்துழைப்பினை பெற்றுக் கொடுத்தல்.

(4) மாகாண அதிகார சபையினை பிரதிநிதித்துவப்படுத்தல்.

*மாகாண கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையினை நிறுவுதல்.*

32. கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபை இரண்டினதும் கூட்டிணைப்பே மாகாண அதிகார சபை ஆகும்.

(1) மாகாண அதிகார சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் பொருளாளர் மாவட்ட அதிகார சபையின் உறுப்பினர்களுக்கிடையில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவதுடன் கிராம அபிவிருத்தி பணிப்பாளர்பதவி அதிகாரபூர்வமாக ஆலோசகராவதுடன் கிராம அபிவிருத்தி விடய பொறுப்புடைய அமைச்சின் செயலாளர் புரோகிதராதல் வேண்டும்.

(2) மாகாண அதிகாரச் சபையின் செயற்பணி.

*மாகாண கிராம அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பணிகள்.*

(அ) மாகாண கிராம அபிவிருத்தி திட்டத்தினை செயற்படுத்துவதற்காக தேவையான ஒத்துழைப்பினை பெற்றுக் கொடுத்தல்.

(ஆ) கிராம அபிவிருத்தியிற்குத் தேவையான விசேட செயற்திட்டங்களை அடையாளம் கண்டு கொள்ளல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்துவதற்காக ஒத்துழைப்பினை பெற்றுக் கொடுத்தல்.

(இ) மாகாணத்தில் கிராம அபிவிருத்தி பயிற்சி நடவடிக்கை மற்றும் ஆய்வு நடவடிக்கைக்காக ஒத்துழைப்பு வழங்குதல்.

*கிராம அபிவிருத்தி அதிகார சபையினை பதிவு செய்தல்.*

33. இக் கட்டளைச் சட்டத்தில் 26, 29 மற்றும் 32 இன் கீழ் தாபிக்கப்பட்ட எல்லா அதிகாரசபையும் கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளரினால் பதிவு செய்யப்படல் வேண்டும்.

*சங்க அதிகார சபைகளில் பதிவினை இரத்துச் செய்தல்.*

34. அதிகார சபையினை பதிவு செய்தல் மற்றும் இரத்துச் செய்தல் என்பனவற்றிற்கு உரிய முறையீடு 90 நாட்களினுள் கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளரிடத்தில் சமர்பிக்க வேண்டியதுடன் முறையீடு பற்றிய கடைசி தீர்மானம் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் தீர்மானமாகும்.

*அதிகார சபையின் சட்டம்.*

35. கட்டளைகளில் காணப்படுகின்றவாறு இக் கட்டளைச் சட்டத்தில் 33 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட அதிகார சபை பொதுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.

*அதிகார சபையின் நிதியம்*

36. பதிவு செய்யப்பட்ட எல்லா அதிகார சபைக்கும் தமது நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதியம் ஒன்றினை அமைத்துக் கொள்ள முடியும்.

*நிதியத்தின் கணக்காய்வு.*

37. இந் நிதியம் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

## பகுதி - IV

## தவறு மற்றும் தண்டனைகள்

38. எவர் ஒருவர்,

(1) இச் சாசனத்தின் கீழ் அல்லது இச்சாசனத்தின் பணிகளுக்காக அல்லது இச் சாசனத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஏதாவதொரு ஆணை அல்லது கட்டளையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு வழங்கப்படுகின்ற அறிக்கையின் அல்லது வேறு ஆவணத்தின் மீது தெரிந்து தெரிந்தே ஏதாவதொரு பொய்யான அல்லது பிழையான அறிக்கையினை விடுக்கப்படுகின்றதும்,

(2) இச் சாசனத்தினால் கட்டளையிடப்பட்டுள்ள ஏதாவதொரு தகவலை அல்லது அறிக்கையினை வழங்குவதற்கு தவறும் போது அல்லது நிராகரிக்கும்போதும்,

(3) கிராம அபிவிருத்தி பணிப்பாளரின் கட்டளைப்படி அல்லது கட்டளை சாதாரணமான காரணம் இன்றி தவறுகின்றவர்களினதும்,

(4) இச் சாசனத்தில் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட ஏதாவதொரு கட்டளையின் கீழ் அல்லது அதனால் எவர் ஒருவரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அல்லது அளித்துள்ள ஏதாவதொரு அதிகாரம், செயற்பாடு அல்லது பணியினை செயற்படுத்தும் போது அல்லது நிறைவேற்றும் போது உரியவருக்கு தடை அல்லது இடையூறு செய்கின்றவர்கள் எல்லோரும்,

(5) இச் சாசனத்தின் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட ஏதாவதொரு கட்டளை மற்றும் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அதன்படி செயற்படுவதனை வேண்டுமென்றே தவறுகின்ற மற்றும்/அல்லது வேண்டுமென்றே தடுக்கின்றவர்களும், இச்சாசனத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாவார்.

வழக்குத் தொடரும் அதிகாரம்.

39. இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிந்த சந்தர்ப்பத்தில் வழக்கு தொடரும் அதிகாரம் கிராம அபிவிருத்தி பணிப்பாளருக்கு அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தருக்குரியதாகும்.

தண்டனை.

40. இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிகின்ற எல்லோரும் நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற வழக்கின் போது குற்றவாளியாக காணப்பட்ட போது, குறைந்த பட்சம் பத்தாயிரம் ரூபா (ரூபா 10,000) மற்றும் ஒரு லட்சம் ரூபாவிற்கு (ரூபா 1,00,000) மேற்படாத தண்டனைக்கு அல்லது ஆறு மாதத்திற்கு (06) மேற்படாத சிறை வாசத்திற்கு அல்லது ஆகிய இரண்டு வகையில் ஒரு வகையிலான தண்டனைக்கு அல்லது உரிய தண்டனை இரண்டிற்கும் உட்படுதல் வேண்டும்.

இச்சாசனத்தின் கீழ் குற்றம் புரிகின்ற எவர் ஒருவருக்கும் நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற வழக்கு பதிவின் போது குற்றவாளியாகும் சந்தர்ப்பத்தில் ரூபா 5,000 தண்டத்திற்கு அல்லது 06 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனை அல்லது உரிய தண்டம் மற்றும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் உள்ளாதல் வேண்டும்.

பகுதி - V

**பொது ஏற்பாடுகள்**

கட்டளை பிறப்பித்தல்.

41. இச் சாசனத்தின் விடயங்கள் பற்றி கட்டளைகளை உருவாக்குவதற்கு விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு அதிகாரம் உண்டு.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரை மேலோங்குதல்.

42. இச் சாசனத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

விளக்கவுரை.

43. வாக்கியம் பற்றி பொருள் தேவையேற்பட்டால் இச் சாசனத்தில்–

"மாகாண சபை" என்பது, வடமேல் மாகாணத்தின் மாகாண சபை,

"விடய பொறுப்புடைய அமைச்சர்" என்பது, கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்புடைய அமைச்சர்,

"செயலாளர்" என்பது, வடமேல் மாகாண சபையின் கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளர்,

"மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம்" என்பது, கிராம அபிவிருத்தி விடயத்திற்காக உருவாக்கப்பட்ட திணைக்களம் என்று கருதப்படும்,

"பணிப்பாளர்" என்பது, வடமேல் மாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் என்று கருதப்படும்,

"உத்தியோகத்தர்" என்பது, வடமேல் மாகாண மாகாண சபையின் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (கிராம அபிவிருத்தி), தையல் ஆலோசகர்கள் மற்றைய உத்தியோகத்தர்கள் என்று கருதப்படும்,

"கிராம அபிவிருத்தி சங்கம்" என்பது, கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் என்று கருதப்படும்.

"சங்கத்தின் அதிகாரப் பிரிவு" என்பது, கிராம அலுவலர் பிரிவிற்கு பார்க்கிலும் விரிவடையாதது என்று கருதப்படும்.

"பிரதேச அதிகார சபை"என்பது, வடமேல் மாகாணத்தினுள் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஒன்று என்ற வகையில் பதிவு செய்யப்பட்ட பிரதேச கிராம அபிவிருத்தி அதிகார சபை என்று கருதப்படும்.

"மாவட்ட அதிகார சபை" என்பது, வடமேல் மாகாணத்தினுள் குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டம் இரண்டிற்குள் ஒன்று என்ற வகையில் பதிவு செய்யப்பட்ட மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகார சபை என்று கருதப்படும்.

"மாகாண அதிகார சபை"என்பது, பதிவு செய்யப்பட்ட வடமேல் கிராம அபிவிருத்தி அதிகார சபை என்று கருதப்படும்.

"உறுப்பினர்" என்பது, கிராம அபிவிருத்தி சங்கம் என்ற போது; ஒவ்வொரு உறுப்பினர்களும்; பிரதேச அதிகார சபை என்னும் போது கிராம அபிவிருத்தி சங்கமும்; மாவட்ட அதிகார சபை என்னும் போது பிரதேச அதிகார சபையும்; மாகாண அதிகார சபை என்னும் போது மாவட்ட அதிகார சபையினை பிரமுகப்படுத்தும் பிரதேச அதிகார சபை என்றும் கருதப்படும்.

"ஒழுங்குமுறை"என்பது, இச்சாசனத்தின் கீழ் அமைக்கப்பட்ட, விதியின் கீழ் அமைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம் மற்றும் அதிகார சபைகளில் அனுமதிக்கப்பட்ட ஒழுங்குமுறை என்று கருதப்படும்.

"கட்டளை"என்பது, இச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அமைக்கப்பட்ட கட்டளை என்று கருதப்படும்.

*10-481*